வானத்தின் நிலவு தேறி வருது
வாசலில் மகனே நீ இல்லை
நீ ஆடிய தொட்டிலும் பாடிய முற்றமும்
தேடுது மகனே நீ இல்லை
தேடுது மகனே நீ இல்லை

உன்னை என் வயிற்றினில் சுமந்தது பெருமை
உனக்கு என் முலையினை சுரந்தது பெருமை
என்னை உன் தாயென சொன்னது பெருமை
என்னுடன் நீ இல்லை என்பது கொடுமை 2

வானத்தின் நிலவு தேறி வருது

பால் முலை காம்பினை கருகிய வா போகும்
போதினில் வந்தென்னை காணெல்லயே
என் காலிடை ஆடிய பூங்கொடியே என்னை
கண்டொரு வர்ர்த்தையும் பேசலையே
ஒருபுறம் பெருமையில் தலை நிமிரும் என்
தனிமையில் எழுதிட கரம் பதிரும்
கரும் புலி ஆகி கதைமுடித்தாய்
என் கருவறை துடித்திட நீ வெடித்தாய் 2

வானத்தின் நிலவு தேறி வருது

தாயக மண்ணிலே போர் வெடி அள்ளியே
மேனியில் பூசியாம் நீ நடந்தாய்
உன் தாயினிலே அந்த பேழையிலே
என்ன கூறியே தியினில் நீ கிடந்தாய்
சொன்னதை முழுமையாய் முடித்தாயா
உன் தேசத்தின் பாடலை படித்தாயா
என்னையும் ஓர் கணம் நினைத்தாயா
பகையவையும் தீ என நீ எரித்தாயா

வானத்தின் நிலவு தேறி வருது